அவசரப் பொது முக்கியத்துவத்தை சபையில் விவாதிக்க சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்கவேண்டும்" என்று கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

இது அரசினரின் அன்றாட நிர்வாகத்திற்குட்பட்ட நிகழ்ச்சி என்ற காரணத்தினால் இதற்கு அனுமதிதர மறுக்கிறேன்.

(4) அமைச்சரின் விளக்க உரை

விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணக் குறைப்பு குறித்த முதலமைச்சரின் விளக்க உரை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் விதி 82 இன் கீழ் இந்த அவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, 1—1—1970-க்கு முன்பு விவசாயிகளுக்கு ஒரு யூனிட் மின்சாரம் 8.25 பைசாவுக்குக் கொடுக்கப்பட்டு வந்தது. தமிழ்நாடு மின்சார வாரியம் தமிழக அரசின் ஒப்புதலின் பேரில் ஒரு யூனிட் மின்சாரத்தின் கட்டணத்தை 10 பைசா என்று 1—1—1970 முதல் உயர்த்தியுள்ளதை இந்த மாமன்றம் அறியும். மின் உற்பத்தி செய்வதற்கும், அதை விவசாயிகள் பயன்படுத்தும் இடத்திற்குக் கொண்டு வருவதற்கும் அதிக செலவாகிறது. அதனால் ஒரு யூனிட் மின்சாரத்திற்கு மின்சார வாரியம் 16 பைசாவுக்குமேல் செலவிட வேண்டியிருக்கிறது. எல்லா பம்பு செட்டுகளுக்கும் யூனிட் ஒன்றுக்கு 8.25 பைசா என்று கட்டணம் வசூலித்தால் மின்சார வாரியத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 9 கோடி இழப்பு ஏற்படுகிறது. அந்த இழப்பில் ஒரு பகுதியையாவது சரிக்கட்ட வேண்டுமென்ற நோக்கத்தோடு தான் 8.25 பைசா என்று இருந்ததை 10 பைசா என்று உயர்த்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. 10 பைசா என்று உயர்த்தினால் கூட மின்சார வாரியத்திற்கு வரும் ரூ. 9 கோடி நட்டத்தை முழுவதுமாக ஈடு கட்ட முடியாது. ஆனால் ரூ. 9 கோடி நட்டம் என்பதை ரூ. 6 கோடி அல்லது 7 கோடி நட்டம் என்ற அளவிற்குக் கொண்டுவர இயலும்.

நிலை இப்படியிருந்தும் சேலம், கோவை, தென் ஆற்காடு மாவட்டங்களில் ஆழமான கிணறுகளில் இருந்து தண்ணீர் எடுக்க அதிகச் செலவாகிறதென்றும் அதற்குச் சலுகை அளிக்கவேண்டுமென்றும் மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த எம்.எல்.ஏ.-க்கள் நேற்று என்னைச் சந்தித்து கருத்து அறிவித்தனர்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலைமையையும், விவசாயிகளுக்குச் சலுகை அளிக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தையும் ஒரு சேர கருத்தில் கொண்டு அரசு ஏற்கனவே எடுத்த முடிவை மறுபரிசீலனை செய்தது. எந்த அளவிற்கு விவசாயிகளுக்குச் சலுகை அளிக்க முடியும் என்பதும் நன்கு பரிசீலிக்கப்பட்டது. 75 அடியும் அதற்கு மேலும் ஆழமுள்ள கிணறுகளிலிருந்து பம்பு செட்டுகளின்மூலம் தண்ணீர் எடுப்பதற்கு விவசாயிகளுக்குச்

சற்று செலவு அதிகமாகும் என்பதை இந்த அரசு உணருகிறது. ஆகவே இவைகளையெல்லாம் கருத்தில்கொண்டு 75 அடியும் அதற்கு மேலும் ஆழமுள்ள கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுப்பவர்களுக்கு ஒரு யூனிட்டுக்கு 10 பைசா என்பதை 9 பைசாவாக மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பது என்று இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது. இதனால் சுமார் 1,20,000 விவசாயிகளுக்குச் சலுகை கிடைக்கும்.

(5) தன்னிலை விளக்கம்.

திண்டிவனம் கூட்டுறவு நில அடைமான வங்கியில் தான் உறுப்பினராக இல்லை என்று கூறியதைத் திருத்தி திரு. க. இராமமூர்த்தி அளித்த விளக்கம்.

THIRU K. RAMOORTHY : Hon. Speaker, Sir, on 2nd April 1970 while intervening in the reply by the Hon. Minister for Co-operation I said that I was not a member of the Land Mortgage Bank in Tindivanam. On verification I found that I had been a member of the Tindivanam Co-operative Land Mortgage Bank by virtue of a loan I have received from the bank for sinking a new well. I have mentioned this fact in my statement of assets and liabilities. I request that that part of my intervention be delited from the proceedings. The error was due to the fact that I misundestood membership for directorship.

(6) கவன ஈர்ப்பு

(அ) தாமதமாக மருத்துவக் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்கள் பல்கலைக் கழக தேர்விற்கு அனுமதிக்கப்படாத நிலை.

THIRU J. JAMES : Mr. Speaker Sir, I call the attention of the Hon. Minister for Education and Health to a matter of urgent public importance, namely, about 35 Medical College students of the Madras University who were admitted for 1969–70 course on 19th September 1969. that is after one month and nineteen days of the reopening of the College due to the pendency of the writ petitions in the High Court, but they were not permitted to sit for the examination to be held in April 1970 along with the other students by the University authorities, though they also remitted fees for the examination and completed the course along with the other students.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 1969-ஆம் ஆண்டு ஜூலையில் ஆரம்பிக்கும் முதலாம் ஆண்டு ஒருங்கிணைந்த எம்.பி. பி.எஸ். வகுப்பில் சேர்க்கப்படுவதற்கென தேர்வுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் 31—7—1969 அன்று அல்லது அதற்கு முன்னர் கல்லூரிகளில் சேரவேண்டுமெனக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. தேர்வுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் வகுப்புகளில் சேராததால் முதல் ஆண்டு ஒருங்கிணைந்த எம்.பி.பி.எஸ். வகுப்பில் 24 காலியிடங்கள் ஏற்பட்டன. இதற்கிடையில், தேர்ந்தெடுக்கப்படாத மாணவர்களில் பலர்